விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 222 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 13 சனிக்கிழமை (29.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஹர்த்தாலால் முடங்கியது தமிழர் தாயகம்

### பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



(யாழ்ப்பாணம்)


முல்லைத்தீவில் கண்டெடுக் கப்பட்ட மனித புதைகுழி தொடர் பான விசாரணையானது சர்வதேச கண்காணிப்பின் கீழ் முன்னெ டுக்க வேண்டும் என்று வலி யுறுத்தி, நேற்று வடக் குக் கிழக்கில் பூரண

11

சர்வதேச கண்காணிப்பில்

## முல்லை மனித புதைகுழியை அகழ்வுக்கு உட்படுத்த வேண்டும்

### ஆர்ப்பாட்டத்தில் உறவுகள் கூட்டறிக்கை




11

### 'சர்வதேசமே எமக்காக குரல் கொடு'

# மனித புதைகுழிக்கு நீதி கோரி

# முல்லையில் பாரிய பேரணி







(முல்லைத்தீவு) "சர்வதேசமே எமக்காக குரல் கொடு", "மனித புதைகுழி விவகாரத்தில் சர்வதேசமே நீதி வழங்க வேண்டும்" என்ற கோஷங்களுடன் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி முல்லைத்தீவில் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

(11ஆம் பக்கம் பார்க்க)

பாப்பரசரின் பிரதிநிதி

## முள்ளிவாய்க்காலில் சுடர் ஏற்றி மலர் அஞ்சலி



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால்பகுதிக்கு விஜ யம் செய்த பாப் பரசர் பிரான்ஸி

11

## அதிகாரப் பகிர்வு தொடர்பில் தொடர்ந்து பேசுவதா? நிறுத்துவதா?

### விக்னேஸ்வரனிடம் தொலைபேசியில் கேட்ட ரணில்

(யாழ்ப்பாணம்)

அதிகாரப் பகிர்வு தொடர் பான பேச்சுவார்த்தையை தொடர்ந்து பேசுவதா? அல் லது நிறுத்துவதா? என ஜனாதி பதி ரணில் தன்னிடம் தொலை பேசியில் கேட்டதாக பாராளு மன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலை வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரி வித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

02

## வடக்குக் கிழக்கில் சதொசவை விரிவுபடுத்த நடவடிக்கை

(மட்டக்களப்பு)

வடக்குக், கிழக்கு மாகா ணத்தில் சதொச விற்பனை நிலையத்தினை விரிவுபடுத்து வதற்கான விசேட நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக வர்த்தக இரா ஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சதொச விற்பனை நிலையங் களை மேம்படுத்துவது குறித்து மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத் தின் டேபா மண்டபத் தில் இடம்பெற்ற

## மனித புதைகுழி அகழ்வுப் பணிக்கு

### நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதி உறுதி

(யாழ்ப்பாணம்)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிக்கு நிதி ஒதுக்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்ததாக தமிழ் மக்கள் கூட்

11

## நீதியான விசாரணையையே சர்வதேசத்திடம் கோருகின்றோம்

### கவனயீர்ப்புப் போராட்டத்தில் சிறீதரன் எம்.பி

(முல்லைத்தீவு)


மனித புதைகுழி தொடர் பான ஒரு நீதியான விசார ணையையே சர்வதேசத்திடம் கோருகின்றோம் என பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்து வம் மற்றும் கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை விவ காரம் உள்ளிட்ட

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 29.07.2023 வரவேற்பு விழாக்காணும் சென்.ஜோன் அம்பியுலன்ஸ் யாழ்.மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆணையாளர்

**உயர்திரு.எட்வேட் டிலிஷான்**

அவர்களை எம் உளமார நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

St John Sri Lanka சென்.ஜோன் அம்பியுலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவையின் முன்னாள் நோயாளர் பராமரிப்புத் தொண்டர்கள் (16556)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




இன்று 29.07.2023 வரவேற்பு விழாக்காணும் சென்.ஜோன் அம்பியுலன்ஸ் யாழ்.மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆணையாளர்

**உயர்திரு.எட்வேட் டிலிஷான்**

*அவர்களை எம் உளமார நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.*

அவருடைய பதவிக் காலத்தில் யாழ்.மாவட்ட சென்.ஜோன் அம்பியுலன்ஸ் சகல வழிகளிலும் முன்னேற்றம் காண எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(16557) St John Sri Lanka சென்.ஜோன் அம்பியுலன்ஸ் நிர்வாகக் குழு, யாழ்.மாவட்டம்

## அதிகார...

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த முறை இடம்பெற்ற அதிகார பகிர்வு தொடர்பான பேச்சு வார்த்தையில் சுமந்திரன் அவர்கள் பேசும் போது மாகாண சபைகள் முறைமை தொடர்பில் எங்களுக்கு கவலையில்லை. அது இருந்தாலும் ஒன்று தான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான் எமக்கு சமஷ்டியே தேவை எனும் தொனிப்பட பேசினார்.

சுமந்திரனின் இவ்வாறான பேச்சினால் கோபமடைந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உங்களுக்கு மாகாணசபை முறை தேவையில்லை என்றால் நாங்கள் இத்தோடு இந்த பேச்சுவார்த்தையை நிறுத்திக்கொள்வோம் அதைப் பற்றி பேசத் தேவையில்லை என தெரிவித்தார்.

அப்பொழுது நான் கூறினேன். வலுவற்றிருக்கும் மாகாணசபை சட்டத்தை வலுப்படுத்தி எங்களிடம் இருந்து பறிபோன அதிகாரங்களை திரும்பவும் மீளப்பெற்றுக் கொடுத்து அந்த அடிப்படையில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்தால் நாங்கள் உங்களுக்கு ஆதரவினை தருவோம் என்று கூறினேன்.

அத்தோடு ஜனாதிபதி ரணிலின் கோபம் கொஞ்சம் தணிந்தது.

இதேவேளை புதன்கிழமை (26) இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் பேசிய சுமந்திரன் மாகாணசபை தேர்தல் எங்களுக்கு வேண்டும் எனும் தொனிப்பட பேசினார்.

இதன் போது குறுக்கிட்ட ஜனாதிபதி கடந்த முறை நீங்கள் பேசும்போது மாகாண சபை முறைமை தேவை இல்லை என்று கூறி இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறு விதமாக பேசுகின்றீர்கள். உங்களுக்கே தெரியாது என்ன தேவை? என்ன தேவையில்லை? என்று என தெரிவித்தார்.

இதனால் சுமந்திரனுக்கு ஜனாதிபதிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஒருவேளை இதை காரணமாக வைத்து இந்த பேச்சுவார்த்தையை முடிவுக்கு கொண்டு வரலாம் என்று ஜனாதிபதி ரணில் நினைக்கக்கூடும் அதனால் தான் இவ்வாறு கடிந்து கொண்டாரோ எனக்கு தெரியாது? அல்லது உண்மையாகவே சுமந்திரனுடைய கூற்றினால் கோபமடைந்தாரோ? என்பது எனக்கு தெரியவில்லை.

எனினும் குறித்த சர்வகட்சி கூட்டம் நிறைவடைந்து நான் கொழும்பில் உள்ள இல்லத்துக்கு சென்றதன் பிற்பாடு தொலைபேசி மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு அழைப்பு எடுத்தார்.

அப்போது என்னை கேட்டார் நாங்கள் தொடர்ந்து பேசுவதா? அல்லது இத்தோடு இதனை நிறுத்துவதா? என்று நான் கூறினேன் கட்டாயம் இதனை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்று.அப்போது அவர் கூறினார் அப்படியானால் சுமந்திரன் ஏன் அப்படி கதைக்கின்றார் என்று? நான் கூறினேன் சுமந்திரன் எப்படி கதைக்கிறது என்றாலும் கதைக்கட்டும் . நீங்கள் செய்யும் வேலை நல்ல வேலை அதாவது எங்களிடமிருந்து பறிபோன அதிகாரங்களை திரும்பவும் மீளப்பெற்று மாகாண சபைக்கு தருவதற்கு நீங்கள் உழைக்கின்றீர்கள் அதனை தொடர்ந்து முன்னெடுங்கள் என்று கூறினேன்.

எங்களிடமிருந்து பறிபோன அதிகாரங்களை திரும்பவும் பெறுவது தொடர்பில் ஒரு குழுவினை அமைக்குமாறு நாம் பரிந்துரை செய்ததையும் நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள் எனவே இதன்ன தொடர்ந்து முன்னெடுங்கள். நீங்கள் அதிகார பகிர்வு தொடர்பிலான பேச்சு வார்த்தையை நிறுத்த வேண்டாம் என்று கூறினேன்.

அப்போது அவர் கூறினார் சரி பாராளுமன்றம் அடுத்தமுறை கூடும் போது மீண்டும் பேசுவோம் என்று கூறினார் என தெரிவித்தார். (ம-7)

## நீதியான...

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நேற்று முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

வடகிழக்கு தழுவிய முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் கொக்குத்தொடுவாயில் அளவுகணக்கு தெரியாதளவில் போராளிகள். மக்கள் ஆயிரக்கணக்கில் புதைக்கப்பட்ட மனித புதைகுழிக்கு எதிராக ஒரு சர்வதேச விசாரணை வேண்டி சர்வதேசத்தின் மேற்பார்வையோடு நீதியான முறையில் விசாரணை செய்யப்பட வேண்டும் என இப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் தேசிய மண்ணிலே பல்வேறுபட்ட இடங்களில் மனித புதைகுழிகள் இன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அந்த மனித புதைகுழிகள் வெளியில் வருமானால் இலங்கை இராணுவம் இலங்கையினுடைய கடற்படை, விமானப்படை, பாதுகாப்பு படைகள் கேள்விக்குட்படுத்தப்படுவார்கள். குறிப்பாக இப்போது கொக்குத்தொடுவாயிலே கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி. மண்டைதீவிலே இருக்கின்ற மனித புதைகுழி. இன்னும் பல இடங்களிலே இராணுவ முகாம்களிலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் மனித புதைகுழிகள் என்பது இராணுவம் மற்றும் அரச படைகளால் மிகவும் வன்மமான முறையிலே அவர்கள் அழைத்து செல்லப்பட்டு மிக நுட்பமான முறையில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட தமிழ் உறவுகளுடையதாக இருப்பதனால் இப்போராட்டத்தில் இன்று மக்கள் அணிதிரண்டிருக்கிறார்கள்.

சர்வதேச சமூகத்திடம் நாம் கோருவது ஒரு நீதி விசாரணை வேண்டும். நாங்கள் தொடர்ந்தும் வஞ்சிக்கப்படுகின்றோம். இந்த மண்ணிலே நீதியற்ற மனிதர்களாக தமிழர்கள் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நீதி விசாரணை என்பதற்காகத்தான் ஒரு சர்வதேச நீதி கோரி இன்று மக்கள் அணியாக திரண்டு தமது ஆதங்கத்தையும். உணர்வுகளையும் வெளிப்படுத்துவதாக இப்போராட்டம் அமைந்துள்ளது.

மனித புதைகுழிகள் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாலும் அது தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படவில்லை. இந்நேரத்தில் புதிதாக மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றது. இதற்கு நீதியான விசாரணை நடாத்தப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் என்பது உண்மையில் நீதியாக நடப்பதில்லை. தமிழ் நீதிபதிகள் தீர்ப்பு வழங்கினால் கூட அதனை பிழை என கூறும் இலங்கையின் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை இலங்கையின் நீதித்துறை சரியாக செயற்படுமா? இவர்களால் நீதியான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமா? என்பது கேள்விக்குறியே அதனால்தான் செம்மணி மனித புதைகுழியிலிருந்து மண்டைதீவு மனித புதைகுழி மற்றும் கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி. மன்னாரில் இருக்கும் மனித புதைகுழி என இவ்வாறு பல இடங்களிலும் மனித புதைகுழிகள் தோண்ட தோண்ட தமிழர்களாக வந்து கொண்டிருப்பதுதான் மிகப்பெரிய அநியாயம். அந்த அநியாயத்தினுடைய நீதி என்பது இலங்கையிலே கிடைக்காது அதனால் தான் இந்த சர்வதேச நீதி விசாரணையை கோரி இந்த போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார். (ம-7.299)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 • 11 • 1960



மறைவு
28 • 07 • 2023

## திருமதி புனிதவதி பத்மநாதன்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.19, பொன்னப்பா லேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பத்மநாதன் அவர்கள் நேற்று (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நிறேகாவின் அன்புத் தாயும் சசிந்தனின் அன்பு மாமியும் ஹிஷோத், மதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் சபாநாயகம்(செட்டி), காலஞ்சென்ற பாலேஸ்வரி மற்றும் சாந்தமலர், நீலாம்பிகை, சூரியகாந்தன்(கொழும்பு), சத்தியமூர்த்தி (ஜேர்மனி), சந்திரகுமார்(சுவிஸ்), சந்திரபாலு(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயகணபதி மற்றும் புனிதவதி, ராஜசேகரம் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் காந்திமதி காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, நாகராசா, கெங்காதரன் மற்றும் லலிதா, கிருஸ்ணபிள்ளை, காஞ்சனாதேவி, கோமளாதேவி, கமலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


076 58 69 309
077 22 83 366


(16559)


தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலால் முடங்கியது தமிழர் தாயகம்








முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட பல பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழிகள் தொடர்பில் நீதி கோரியும் சர்வதேச கண்காணிப்பின் கீழ் துரித விசாரணை கோரியும் நேற்று வடக்கு- கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.
(4-30-33-60-104-285-250-316)

## அம்பலவாணர் சுவாமிகளின் திருவுருவச்சிலை திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)

இணுவில் காரைக்கால் சிவன் கோவில் வீதியில் காரைக்கால் சித்தர் அம்பலவாணர் சுவாமிகளின் (மணியப்பொடி சுவாமிகள்) உருவச்சிலை திறப்பு விழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உருவச்சிலையை சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் திறந்து வைக்கவுள்ளார். (4)

## அமைச்சர் விதுர விக்ரமநாயக்க யாழ். நெடுந்தீவிற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று முன் தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

கடற்படையின் விசேட படகு மூலம் நெடுந்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக அமைச்சர் சென்றிருந்தார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற பாடசாலை நூலக அபிவிருத்தி மற்றும் மொழி இலக்கிய கலை மேம்பாட்டுத் திட்டத்தினையே அமைச்சர் ஆரம்பித்து வைத்தார். (4-33)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் பாடசாலை அதிபர் எஸ். இந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## கலைஞர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(4)

## முழுமதி அறிவியல் அரங்கம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் அமரர். தம்பு. சிவலிங்கம் ஞாபகார்த்த முழுமதி அறிவியல் அரங்கம் எதிர்வரும் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நிலைய முன்றலில் சனசமூக நிலைய உப செயலாளர் நா.குமணதாசன் தலைமையில் நடைபெறும்.

இதன்போது சிறுவர் மற்றும் இளையோருக்கான சட்ட விழிப்புணர்வு வினாடி வினா போட்டியும் நடைபெறவுள்ளது. (4)

## 7 மாதா சொரூபங்கள் ஆனைக்கோட்டையில் உடைப்பு



(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களினால் ஆனைக்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஏழு மாதா சொரூபங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டை சந்தியில் ஒரு சொரூபமமும், ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில் ஒரு சொரூபமும், ஆனைக்கோட்டை கராஜ்ஜடியில் ஒரு சொரூபமும் அடைக்கல மாதா தேவாலயத்தை சுற்றி 3 சொரூபங்களும் மற்றும் ஆனைக் கோட்டை குடிமனைகளுக்கு மத்தியில் உள்ள ஒரு சொரூபமும் உடைக்கப்பட்டுள்ளன. இதில் சில இடங்களில் சொரூபங்கள் உடைத்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. சில இடங்களில் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளன.

சி.சி.டி.வி காட்சிகளை அடிப் படையாக வைத்து, யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான குழுவினர் இது குறித்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(4-33-104)

## கவிதை நூல்கள் வெளியீடு

(சாவகச்சேரி)

கவிஞர் திருமதி சுவர்ணா கௌரிபாலாவின் (ஔவை) "திருத்தொண்டர் சரிதம், உண்மையைத் தேடி" ஆகிய கவிதை நூல்களின் வெளியீட்டு வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நூல்களின் வெளியீட்டு உரையை செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனும், ஆய்வுரைகளை ஓய்வு நிலை கல்வியியலாளர் க.தர்மராசா மற்றும் ஆசிரிய ஆலோசகர் சு.லோகேஸ்வரன் ஆகியோர் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-30)

# இலங்கையை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது பாகிஸ்தான்



இலங்கைக் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடை யிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியின், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பாடிய இலங்கை அணி, முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களை பெற்றது.

இலங்கை அணி சார்பில் தனஞ்சய டி சில்வா 57 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணியின் அப்ரர் அஹமட் 4 விக்கெட்டுக்களை யும் நஷீம் ஷா 3 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தநிலையில், தமது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பாடிய பாகிஸ்தான் அணி 134 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 576 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

அணிசார்பில், அதிகபடி யாக அப்துல்லா ஷபீக் 201 ஓட்டங்களையும் அகா சல்மான் 132 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணியின், ஹசித பெர்னாண்டோ 133 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதனையடுத்து, இலங்கை அணி தமது இரண்டாம் இன்னிங்ஸில் 188 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் சகல விக கெட் டுக்களையும் இழந்தது. அணி சார்பில் அதிகபடியாக ஏஞ்சலோ மெத்யூஸ் 63 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில், பாகிஸ்தான் அணியின் நோமன் அலி 70 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக் களை கைப்பற்றினார். இன்னிங்ஸ் ஒன்றில் நோமன் அலி பெற்றுக் கொண்ட அதிக விக் கெட்டுக்கள் இதுவாகும்.

இதன்படி, இலங்கை அணி இரண்டாவது டெஸ்ட் கிரிக் கெட் போட்டியிலும் தோல் வியைத் தழுவியுள்ளது. இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்படி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 2 - 0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. (4)

## அயர்லாந்துக்கு எதிரான போட்டியில்
# களமிறங்கும் பும்ரா

இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா கடந்த ஆண்டு முதுகில் காயம் அடைந்தார். முதுகில் அழுத்தத்தினால் எலும்பு பகுதியில் முறிவு ஏற்பட்டது. இதற்காக அவர் கடந்த மார்ச் மாதம் சத்திரசிகிச்சை செய்து கொண்டார்.

அதன்பிறகு காயத்தில் இருந்து மீள்வதற்கான பயிற்சிகளை பும்ரா மேற்கொண்டு வருகிறார். பெங்களூரில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமியில் அவர் பயிற்சி பெற்று வருகிறார். அவர் முழுமையாக குணம் அடைந்து விட்டதாக கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்தது.

இதனால் அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் பும்ரா விளையாட வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதேநேரத்தில் பும்ரா குறித்து- ரோகித் சர்மா கூறும் போது அயர்லாந்துக்கு எதிரான 20 ஓவர் தொடரில் பும்ரா விளையாடுவாரா? என்பது தெரியவில்லை என்றார்.

இந்த நிலையில் அயர்லாந்து தொடரில் பும்ரா விளையாடுவார் என்று பி.சி.சி.ஐ செயலாளர் ஜெய்ஷா தெரிவித்துள்ளார். (4)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2875

கவிசாந்





ஹுதர்சன்




தர்சிகன்





நகுல்




சந்தனு




விமல்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆண்டுகளின் பின்னர் பெண் ஒருவருக்கு சிங்கப்பூரில் தூக்குத்தண்டனை விதிப்பு

(சிங்கப்பூர்)

20 ஆண்டுகளின் பின்னர் சிங்கப்பூர் அரசாங்கம் பெண் ஒருவருக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

31 கிராம் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் குறித்த பெண் கடந்த 2018 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்.

45 வயதுடைய குறித்த பெண் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதனை தொடர்ந்து நேற்றைய தினம் தூக்கிலிடப்பட்டார்.

போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாவனைக்கு எதிராக சிங்கப்பூர் அரசாங்கம் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய 500 கிராம் கஞ்சா மற்றும் 15 கிராம் ஹெரோ யின் உள்ளிட்ட போதைப் பொருளை தம் வசம் வைத்தி ருந்தால் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டால் மரணதண்டனை விதிக்கப்படும் என்பது அந்நாட் டின் சட்டமாகும்.

இந்த நிலையில், கடந்த 26 ஆம் திகதி இளைஞர் ஒருவரும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

அத்துடன், கடந்த 2020 ஆம் ஆண்டு கொவிட்டு தொற்றுக் காலப்பகுதிக்கு பின்னர் இது வரை 15 ஆண்களை சிங்கப்பூர் அரசாங்கம் போதைப்பொருள் குற்றச் சாட்டில் தூக்கிலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தடை செய்யப்பட்ட ஏவுகணைகள்; ரஷ்யாவிடம் வெளிப்படுத்திய வடகொரியா



(பியாங்யாங்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், கண்காட்சி ஒன்றில் தடை செய்யப்பட்ட ஏவுகணைகளை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சரிடம் பெருமையுடன் காட்டியுள்ளார்.

அண்டை நாடுகளான வடகொரியாவும் ரஷ்யாவும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உறவை வலுப்படுத்த உறுதி தெரிவித்ததாக வடகொரிய அரசாங்க ஊடகம் தெரிவித்தது.

வடகொரியாவில் 'வெற்றி நாளாக' கொண்டாடப்படும் கொரியப் போரின் 70 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ரஷ்ய அமைச்சர் செர்கெய் ஷோய்குவும் சீனாவின் உச்ச ஆட்சி மன்ற உறுப்பினரும் இவ்வாரம் வடகொரியாவுக்கு வந்திருந்தனர்.

அப்போதுதான் தடை செய்யப்பட்ட ஏவுகணைகளை கிம் ஜாங் உன் அவர்களுக்கு காட்டினார்.

ரஷ்யா, சீனா ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட ஐ.நா பாதுகாப்பு மன்றத் தீர்மானங்களின் கீழ் தடை செய்யப்பட்ட ஏவுகணைகளை வடகொரியா கண்காட்சியில் காட்சிப்படுத்தியிருந்தது.

அமெரிக்காவுக்கு எதிராக ரஷ்யா, சீனா, வடகொரியா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுபட்டு இருப்பதை கண்காட்சி காட்டியது. (நி)

# பாடசாலைகளில் ஸ்மார்ட் போன்களுக்கு தடை

(ஜெனிவா)

பாடசாலைகளில் ஸ்மார்ட் போன்களுக்கு தடை விதிக்க யுனெஸ்கோ அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை கல்வியில் தொழில்நுட்பத்தின் அதிகபடியான பயன்பாடு குறித்து ஐக்கிய நாடுகள் சபை கவலை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி மற்றும் அறிவியல் பிரச்சினைகளைக் கையாளும் குழுவான யுனெஸ்கோவின் 2023 உலகளாவிய கல்வி கண்காணிப்பு அறிக் கையில் இந்த விடயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் ஸ்மார்ட் போன் பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும் என்றும் கல்வியின் தரத்தை மேம்படுத்த ஒன்லைன் கல்வியை அதிகம் நம்பக்கூடாது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

அறிக்கையின்படி, ஸ்மார்ட் போன்களின் அதிகபடியான பயன்பாடு கற்றலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மற்றும் குழந்தைகளின் உணர்ச்சி நிலைத் தன்மையில் 'திரை நேரம்' அதிகரிக்கிறது.

ஸ்மார்ட் போன்களுக்கான தடை, தொழில்நுட்பம் சார்ந்த கல்வியின் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும் என்ற செய்தியை அனுப்ப உதவும் என்று யுனெஸ்கோ நம்புகிறது.

இதேவேளை உலக நாடுகளில் ஆறில் ஒரு பங்கு பாடசாலைகளில் ஸ்மார்ட்போன்கள் தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அதிகரிக்கும் புவி வெப்பநிலை ஐ.நாவின் புதிய தகவல்

(ஜெனிவா)

உலக வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகளின் நிறுவனமான உலக வானிலை அமைப்பு தகவலொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வகையில், 1.20 லட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பூமி தற்போது வெப்பநிலையில் இருப்பதாக ஆய்வில் அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மனித செயற்பாடுகள் காரணமாக புவி வெப்பமயமாதல் அதிகரிப்பது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்துவதற்காக உலக நாடுகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

இருப்பினும், இதில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படவில்லை. (நி)

# இராசிபலன்

29.07.2023
ஆடி 13, சனிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 9.08 மணிவரை
கேட்டை முன்னிரவு 8.54 மணிவரை

சுபநேரம் -3.03-04.33 மணிவரை
இராகுகாலம்-9.03-10.33 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்- கார்த்திகை, ரோகினி.

வளவன்



மேஷம்

யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.



கடகம்

மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபல மானவர்களின் சந்திப்பால்பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்.



துலாம்

பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.



மகரம்

வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்வீர்கள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், இலாபகரமான நாள், போசன சுகமுண்டு.



ரிஷபம்

உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் தீரும், நண்பர்கள் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.



சிம்மம்

சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வாகன சுகமுண்டு.



விருச்சிகம்

நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்



மிதுனம்

நன்மைகள் நடைபெறும் நாள், கனவு பலிதமுண்டு, உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.



கன்னி

மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



தனுசு

கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.



மீனம்

கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகி விடும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமாக இருக்கும் பொழுது நோயைப் பற்றி தெரிந்து கொள்.

## குவைத்தில் இருந்து
# 62 இலங்கையர்கள் நாடு கடத்தல்



(கொழும்பு)
குவைத்தில் வீசா இன்றி சட்டவிரோதமாக வீட்டுப் பணியாளர்களாக தங்கியிருந்த இலங்கையர்கள் 62 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இலங்கை தூதரகத்தினால் தற்காலிக விமான கடவுச்சீட்டின் கீழ் குவைத்தில் நாடு கடத்தப்பட்டு நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (நி)

# அரசாங்கத்தை உருவாக்கும் சக்தி நாமே
## மார்தட்டுகிறார் நாமல்

(கொழும்பு)
"பொதுஜன பெரமுன என்பது இந்த நாட்டில் அரசாங்கத்தை உருவாக்கும் சக்தியாகும்" என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை தொகுதி மாநாட்டில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

தேர்தல் நெருங்கும் போது தான் அடுத்த தேர்தலில் கூட்டணி குறித்து முடிவெடுப்போம். நாங்கள் எங்கள் கட்சியை



அங்கு அழைத்துச் செல்வோம். தேர்தல் காலத்தில் தான் கூட்டணி குறித்து பேசப்படும். எமது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் எமது பிரதிநிதிகளிடம் கேட்டறிந்து முடிவெடுப்போம்.

இந்த நேரத்தில், இந்த நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

இது ஒரு ஜனநாயக நாடு என்று நாங்கள் நம்புகிறோம். தேர்தல் நடத்த அரசாங்கத்தின் நிதி நிலைமை நியாயமான சூழ்நிலைக்கு மாற வேண்டும். அதுவரை அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்க வேண்டும். நான் எப்பொழுதும் கூறுவது போல் ரணில் விக்கிரமசிங்கவின் முதலாளித்துவ வர்க்க பொருளாதாரக் கொள்கைகளின் பலன்களை எமது மக்களுக்கு வழங்குவதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# பாடசாலை பாதணிகள், பைகள் விலை குறைப்பு

(கொழும்பு)
பாடசாலை பாதணிகள் மற்றும் பைகளின் விலையை 10% குறைக்க உற்பத்தியாளர்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய, பாடசாலை பாதணிகள் மற்றும் பைகள் உற்பத்தியாளர்களுடன் நேற்று நிதிய மைச்சில் நடந்த நீண்ட கலந்துரையாடலின் பின்னரே உற்பத்தியாளர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த உற்பத்தியாளர்கள், தற்போது சந்தையில் உள்ள தொகையையும் புதிய விலை திருத்தத்தின் கீழ் விற்பனை செய்யப்படவுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அதன்படி, அந்த நன்மையைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிய உற்பத்தியாளர்களுக்கு நிதி இராஜாங்க அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கையர் உட்பட ஐவருக்கு
## குவைத்தில் மரணதண்டனை நிறைவேற்றம்

(கட்டார்)
குவைத் அரசு 5 கைதிகளுக்கு மரணதண்டனையை நிறைவேற்றியுள்ளது.

மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 5 பேரில் இலங்கையை சேர்ந்த போதைப்பொருள் வியாபாரி ஒருவரும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட 5 பேரில் 2015 ஆம் ஆண்டு ஷியா மசூதியில் குண்டுவெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# மசகு எண்ணெய்யின் விலையில் வீழ்ச்சி

(வோஷிங்டன்)
உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்றையதினம் சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இதன்படி, டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 79.65 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை நேற்றைய தினம் 83.68 அமெரிக்க டொலராக வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

இயற்கை எரிவாயு பீப்பாய் ஒன்றின் விலை, வீழ்ச்சியை பதிவு செய்து 2.49 அமெரிக்க டொலராக காணப்படுகிறது. (நி)

# ரூபாவின் பெறுமதியில் திடீர் உயர்வு

(கொழும்பு)
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று உயர்வடைந்துள்ளது.

இந்தநிலையில், இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 335.65 ரூபாவாகவும் கொள்வனவு விலை 322.66 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கனேடிய டொலரின் விற்பனை விலை 255.02 ரூபாவாகவும், கொள்வனவு விலை 242.59 ரூபாவாகவும் யூரோ ஒன்றின் விற்பனை பெறுமதி 370.26 ரூபாவாகவும் கொள்வனவு பெறுமதி 353.41 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அதேசமயம், ஸ்டெர்லிங் பவுண்டின் விற்பனை பெறுமதி 430.87 ரூபாவாகவும், கொள்வனவு பெறுமதி 412.46 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், பல வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக ரூபாவின் பெறுமதியில் சிறு உயர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வீதிகளும் வரைபடமாக்கப்படும்

(கொழும்பு)
2025ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சொந்தமான வீதிகளை வரைபடமாக்க திட்டமிட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் அவை தொடர்பான விபரங்கள் வர்த்தமானியில் வெளியிடப் படும் எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத்தெரிவித்தபோது அவர் இதனை தெரிவித்துள்ளார். 36 வருடங்களின் பின்னர் இந்த வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும், இதன்மூலம் வீதிகள் எந்தெந்த நிறுவனங்களுக்குச் சொந்தமானவை என்பது அடையாளப் படுத்தப்படும்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய,



இணையவழி தொழில்நுட்பத்தின் ஊடாக பொதுமக்களுக்கு சேவைகளை உத்தியோக பூர்வமாக வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ், 69 உள்ளூராட்சி மன்றங்கள் தமது சேவைகளை இணைய வழி தொழில்நுட்பத்தின் ஊடாக முன்னெடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# தொடரூந்து திணைக்களத்தை
## அதிகார சபையாக மாற்றுவதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)
தொடரூந்து திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு போக்குவரத்து அமைச்சர் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக தொடரூந்து தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் வெளியிட்ட அகில இலங்கை தொடரூந்து பொது சேவையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஐ.ஏ.டி. பெரேரா இந்தவிடயத்தை தெரிவித்துள்ளார்.

தொடரூந்து திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்கு முன்னர் பருவகால பயணச் சீட்டு ரத்துச் செய்யப்பட மாட்டாது என மக்களுக்கு வாக்குறுதி வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல்
## அமைச்சர் ஜனக வக்கம்புர உறுதி

(கொழும்பு)
அடுத்த வருடம் கண்டிப்பாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்தார்.

ஸ்திரமான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், எல்லை நிர்ணய குழு அறிக்கை தொடர்பான பரிந்துரைகளை அமுல்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் குறித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முறையினால் சன்னஹித செயற்பாடுகள் பாரியளவில் பாதிக்கப்படுவதுடன் உள்ளூராட்சி அதிகாரிகள் மேலும் சிக்கல் நிலைமைக்கு உள்ளாகும் நிலை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# வாழ்க்கைச் செலவு குறைந்த
## நாடுகளில் இலங்கை 7 ஆம் இடத்தில்

(கொழும்பு)
வாழ்க்கைச் செலவு குறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 7 ஆவது இடத்தில் உள்ளது.

139 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இணையத்தள மொன்றினால் இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு மிகவும் குறைந்த நாடாக பாகிஸ்தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. வாழ்கைச் செலவு மிக வும் அதிகரித்த நாடாக சுவிட்ஸர்லாந்து பதிவாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், வெதுப்பகங்களை ஒழுங்குபடுத்த விசேட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், வெதுப்பக நிலையங்கள் போன்றவற்றினை ஒழுங்குபடுத்தி சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் யாழ்.அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.**



இக்கலந்துரையாடலில் உணவு விற்பனை நிலையங்களில் காணப்படும் சுகாதாரம், உணவின் தரம், அளவு, உணவு விற்பனை நிலையங்களில் உணவை கையாளுபவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள், உணவுச்சாலைகளுக்கான பதிவு, தரப்படுத்தல், குறித்த சட்டத்திற்கு கீழான ஒழுங்கு விதிகளும் தண்டனைகளும் போன்ற பல்வேறு விடயங்கள் விளங்கப்படுத்தப்பட்டன.

பெரும்பாலான யாழ்ப்பாண நகர உணவுச்சாலைகள் உரிய தரங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போதியளவு காய்கறி உற்பத்தி செய்யப்படுவதுடன் அவை வேறு மாவட்டங்களுக்கு விற்பனைக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் இங்குள்ள உணவு நிலையங்களில் இத்தகைய மரக்கறி வகைகளை பயன்படுத்தப்படாமலும் சோயாமீற், கடலை, பூசணி போன்றவற்றையே கறிகளாக பயன்படுத்துவதாகவும் நுகர்வோர் மத்தியில் அதிருப்தியான நிலை காணப்படுவதாகவும் அரசாங்க அதிபரால் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் உணவுச்சாலைகளில் கடமையாற்றுபவர்களுடைய பொதுமக்கள் தொடர்பாடல், உடை அமைப்பு, உணவுச்சாலைகளுக்கான இட வசதி போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் வைத்தியர்களால் விவாதிக்கப்பட்டன,

அதனைத் தொடர்ந்து இக்கலந்துரையாடலில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. உணவு மற்றும் சிற்றுண்டி வகைகளில் விற்பனை செய்யப்படும் உணவுகளின் அளவு, நிறை என்பவற்றுக்கமைய விலைகள் தீர்மானிக்கப்பட்டு காட்சிப்படுத்தல் வேண்டும்.

இதற்காக உணவுச்சாலை உரிமையாளர்கள் தமக்குள் ஓர் அமைப்பினை உருவாக்கி மேற்படி அளவு, நிறை என்பவற்றுக்கேற்ப பொதுவான விலையினை தீர்மானத்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக அதனை மாவட்டச் செயலகத்திற்கு அறியத்தருவதுடன் அவ்விபரத்தினை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டது.

வெதுப்பக உற்பத்திகளுக்குரிய விலைகளும் உற்பத்தியின் அளவு, நிறை என்பவற்றிற்கேற்ப வெதுப்பக உரிமையாளர் சங்கங்களால் நிர்ணயிக்கப்பட்டு அவை பகிரங்கப்படுத்தப்படுவதோடு விற்பனை நிலையங்களில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பான விபரங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாவட்டத்தின் பல நகரங்களிலும் குறிப்பிடத்தக்க உணவுச்சாலைகள் உற்பத்தி மற்றும் சேவை வழங்கலில் உயர்தரத்தை பேணி அவற்றுக்குரிய சான்றிதழை சுகாதாரப் பிரிவினரிடம் பெற்றுக் கொண்ட போதிலும், பெரும்பாலான கடைகள் புதிய தரத்துக்கு அமைவாக வேண்டியதை கருத்திற் கொண்டு யாழ்ப்பாண வணிகர் அனுசரனையுடன் பிரதேச செயலக ரீதியாக சிறந்த தரத்தை பேணும் உணவுச்சாலைகளை கௌரவித்து சிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நிகழ்வுகளும் ஒழுங்கு செய்ய தீர்மானிக்கப்பட்டது. (4-104)

## இசை விழா தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பும் மாற்றத்திற்கான இளைஞர்கள் அமைப்பினரும் யாழ்ப்பாணத்தின் கலைஞர்கள், கலைக் குழுக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் "கறுப்பு ஜூலை இருள் களைய இசை யால் சுடரேற்றுவோம்" என்ற தொனிப்பொருளில் யாழ். தந்தை செல்வா கலையரங்கில் முன்னெடுக்கவுள்ள "விடுதலைத் தாளங்கள்" மாபெரும் மக்கள் இசை விழா தொடர்பான ஊடக சந்திப்பு இன்று சனிக்கிழமை பி.ப. 1 மணியளவில் யாழ்.தந்தை செல்வா கலையரங்கில் இடம் பெறவுள்ளது.

இவ் ஊடக சந்திப்பில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகளும் மாற்றத்திற்கான இளைஞர்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்நிகழ்வுக்காக வருகை தந்துள்ள ஈழத்தின் புகழ் பூத்த கலைஞர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

## வீடு புகுந்து வாள்வெட்டு

## வாளை பறித்து வீட்டு உரிமையாளர் வெட்டியதில் திருடனுக்கும் காயம்

(குருமன்காடு)

வவுனியா நொச்சுமோட்டையில் இனந்தெரியாத குழுவொன்று வீடொன்றில் புகுந்து அங்கிருந்த தம்பதியை வாளால் வெட்டி திருட முற்பட்ட நிலையில் வீட்டு உரிமையாளர் வாளைப் பறித்து திருடர்கள் மீது பதில் த்தாக்குதல் நடத்திய நிலையில் திருடர்கள் காயமடைந்த நிலையில் தப்பி ஓடியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வீட்டில் மாரிமுத்து செல்வநாயகம் அவரது மனைவி செ.செல்வராணி இருவரும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த நிலையில் முகமூடி அணிந்த நிலையில் திருடர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் வீட்டினுள் புகுந்து இருவர் மீதும் வாளால் வெட்டியுள்ளனர்.

இந் நிலையில் செல்வநாயகம் என்பவர் திருடர்கள் கொண்டு வந்த வாளை பறித்து அவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதனால் திருடர்களில் ஒருவன் காயமடைந்த நிலையில் வீட்டில் இருந்த தொலைபேசியை எடுத்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (4-250)

## பொலிஸாரின் துணையுடன் கிளிநொச்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு

### அபிவிருத்திக்குழு கூட்டத்தில் மக்கள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் பொலிஸாரின் ஆதரவுடன் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாக ஆதாரங்களுடன் மக்கள் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போதே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வுகள் பொலிஸாரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் பொலிஸாருக்கு அல்லது விசேட அதிரடிப் படையினருக்கு தகவல்களை வழங்கினாலும் அவற்றை அவர்கள் கண்டு கொள்வதில்லை என்றும் அவற்றை ஊக்குவிக்கும் விதத்திலே அவர்களது செயற்பாடு அமைந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் குறித்த விடயம் பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

மேலும் குறித்த பகுதிகளில் குறிப்பாக ஊரியான், முரசுமோட்டை, குஞ்சுபரந்தன், குடமுருட்டி, செருகன் ஆகிய பகுதிகளில் பொலிஸாரின் துணையுடனே குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் விவசாய அமைப்புகளாலும் விவசாயிகளாலும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளரால் அனுமதியற்ற மணல் அகழ்வுகளால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பிலும் குறிப்பிட்டார்.

மேலும்பொலிஸாரின்துணையுடன் பொலிஸ் வாகனங்களோடு பாதுகாப்பாக கொண்டு செல்லப்படுதல் போன்ற படங்களும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் காட்சிப்படுத்தப்பட்டன. (4-315)

## கல்வியங்காடு சிறுமி மரணம்; விசாரிக்க விசேட குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் 17 வயதுச் சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரினால் இரண்டு பொலிஸ் அணிகள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்,

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான இரண்டு அணிகள் குறித்த சிறுமியின் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் உரிய சட்ட நடவடிக்கை முன்னெடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 242





தங்கள் கண்கள் சிவந்து அனலைக் கக்குகின்றன. எத்தனை காலம் இந்த வேதனையைத் தங்கள் மனதிற்குள்ளேயே வைத்துக் கொண்டு புழுங்கப் போகிறீர்கள்? என்னைத் தங்கள் 'உயிருக்கு உயிரான சிநேகிதன்' என்று ஆயிரந்தட்வை கூறியிருக்கிறீர்கள்.

அப்படிப்பட்ட சிநேகிதனிடம் தங்கள் உள்ளத்தைத் திறந்து காட்டக் கூடாதா? வேதனை இன்னதென்பதை எனக்குச் சொல்லக் கூடாதா? பரிகாரம் ஏதாவது கண்டு பிடித்துச் சொல்ல எனக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாதா? தாங்கள் மனத்திற்குள்ளே வேதனைப்பட்டுப் புழுங்குவதைப் பார்த்துக் கொண்டு எத்தனை நாள் தான் நான் சும்மா இருக்க முடியும்?" என்று அடங்கா ஆர்வத்தோடு கூறினான்.

ஆதித்த கரிகாலன் ஒரு நெடிய பெருமூச்சு விட்டு, "நண்பா! என் மன வேதனை என்றும் தீராத வேதனை.என் உயிரோடு மடிய வேண்டிய வேதனை. அதற்குப் பரிகாரமே கிடையாது. ஆயினும் உன்னிடம் சொல்லக் கூடாது என்பதில்லை. இன்றிரவு சொல்லுகிறேன். இப்போது கிழவருடன் அரண்மனைக்குப் போய்ச் சேர்வோம். அவரைத் தனியாக அனுப்புவது உசிதமில்லை" என்று கூறிப் பாறையிலிருந்து எழுந்தான்.

ஐம்பத்துநான்காம் அத்தியாயம்

"நஞ்சினும் கொடியாள்"

மாமல்லபுரத்தில் பழைய பல்லவ சக்கரவர்த்திகளின் மாளிகை ஒன்றில் அன்றிரவு அம்மூன்று வீரசிகாமணிகளும் தங்கினார்கள். இரவு உணவு அருந்தியானதும் மலையமான் அரசர் ஐந்து ரதங்களுக்கு அருகில் அரவான் கதை நடக்கிறது என்று கேள்விப்பட்டு அதைக் கேட்கப் போய் விட்டார். ஆதித்த கரிகாலனும் பார்த்திபேந்திரனும் அரண்மனை மேல் மாடத்துக்குச் சென்றார்கள்.

மேல்மாடத்திலிருந்து ஆதித்த கரிகாலன் மாமல்லபுரத்தின் இரவுத் தோற்றத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். ஆங்காங்கு மினுக்கு மினுக்கு என்று சில தீபங்கள் மங்கலாகப் பிரகாசித்தன. வீதிகளில் பெரும்பாலும் நிசப்தம் குடிகொண்டிருந்தது. கோவில்களில் அர்த்தஜாம பூஜை முடிந்து வெளிக் கதவுகளைச் சாத்திக் கொண்டிருந்தார்கள். சமுத்திரத்தின் கோஷம் 'ஓ' வென்று சோகத் தொனியாகக் கேட்டது. ஐந்து ரதங்களுக்குப் பக்கத்தில் வில்லுப்பாட்டு வித்வானும் அவருடைய கோஷ்டியும் அரவான் கதை நடத்த, அவர்களைச் சூழ்ந்து கதை கேட்டுக் கொண்டிருந்த ஜனக் கூட்டம் தீவர்த்திகளின் ஒளியில் கரிய நிழல் உருவங்களாகத் தெரிந்தனர்.

"இந்த முதிர்ந்த வயதில் கிழவர் கதை கேட்கப் போய் விட்டார், பார்! என்ன இருந்தாலும் பழைய காலத்து மனிதர்கள்தான் மனிதர்கள்! அவர்களுடைய உடல் வலிமையும் மனோதிடமும் இந்த நாளில் யாருக்கு உண்டு?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"அரசே! தாங்களும் பழைய காலத்தின் பெருமையைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விட்டீர்களா? பழைய கால மனிதர்கள் சாதித்த என்ன காரியத்தை நம் காலத்தில் நாம் சாதிக்கவில்லை? தங்களைப் போல் இளம் பருவத்தில் போர்க்களத்தில் வீரச் செயல் புரிந்தவர்களைப் பற்றிக் கதைகளிலும் காவியத்திலும் கூடக் கேட்டதில்லையே?" என்றான் பார்த்திபேந்திரன்.

"பார்த்திபா! நீ உண்மை உள்ளம் படைத்தவன். மனத்தில் ஒன்று வைத்துக் கொண்டு வாயினால் ஒன்று பேசாதவன் என்பதை நன்கு அறிந்திருக்கிறேன். இல்லாவிட்டால் நீ என்னுடைய நண்பன் அல்ல. இத சத்ரு என்றே சந்தேகிப்பேன்.' அவ்வளவு தூரம் என்னைக் குறித்து நீ முகஸ்துதி செய்கிறாய். முகஸ்துதியைப் போல் ஒருவனைப் பாதாளப் படுகுழியில் தள்ளக் கூடியது வேறொன்றுமில்லை" என்றான் ஆதித்த கரிகாலன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முறுக்கு அச்சு



காலிங் பெல்லை அழுத்தியது புது இடத்துத் புதுத் தோழி சொப்னா தான் எனத் தெரிந்து கொண்டு கதவைத் திறந்தாள் ராகிணி. "முறுக்கு அச்சுச் இருக்குமா? ரொம்ப நாளா செய்யணும்னு ஆசை" என்றாள் சொப்னா. "இதோ எடுத்து வரேன், எடுத்துட்டு போ" என முறுக்கு அச்சை எடுத்து வந்து நீட்டினாள் ராகிணி.

"தொலைத்து விட சான்ஸ் இருக்கு. அதனால இந்த தேன்குழல் அச்சை மட்டும் எடுத்துக்குறேன்" என ஒரு வில்லையுடன் முறுக்கச்சை எடுத்துச் சென்றாள் சொப்னா.

அடுத்த நாள் முறுக்கச்சு திரும்பி வந்தது. கூடவே சில அழகழகான முறுக்குகளும். "அட இது நல்லாருக்கே கஷ்டப் பட்டு சுடாமலே முறுக்குகள் வந்துள்ளதே.

சொப்னா மாதிரி இன்னும் நான்கு நம்ம ஊர் மக்கள் இந்த அப்பார்ட்ர் மெட்மெண்டில் இருந்தால் போதும் போலவே. வருடம் முழுவதும் நம்ம முறுக்கச்சு சுற்றிச் சுழன்று முறுக்குகளைக் கொண்டு வந்து சேர்த்து விடும் போலவே" என தனக்குள் நகைத்துக் கொண்டாள்.

துளி எண்ணெய் இல்லாமல், சும்மா கரகர, மொறு மொறுவென, மிளகாய்த் தூள் சேர்த்துத் செவசெவ வென செய்து தான் ஒரு ஆந்திரப் பெண் என்பதை காரசாரமாக நிரூபித்திருந்தாள் சொப்னா. ராகிணி, "ரெசிபி சொல் லேன்" என்றதும் சொப்னா "கடலை மாவை நல்லா வறுத்து" என முடிக்கு முன்னே ராகிணி "என்னது கடலை மாவை வறுக்கணுமா?" என்று ஆச்சரியப்பட்டதும் சொப்னா "சரி சரி, நீ எப்போ ஃப்ரீயா இருப் பேன்னு சொல்லு வந்து செஞ்சு காட்டிட்டுப் போறன்" என்றாள்.

போகும்போது அப்படியே "அடுத்த தடவ ஓமப் பொடி தான் செய்யணும். சுதாவுக்கு (சுதாகர்) ரொம்ப பிடிக்கும்" என்றாள்.

இரண்டொரு நாளில் இருவருமாக சேர்ந்து ராகிணி வீட்டில் முறுக்கு மாவு தயார் செய்தனர். "மாவு ரொம்ப கெட்டியா இருக்கே, பிழிய வருமா?" என்றாள் ராகிணி. "கெட்டியா இருந்தால் எண்ணெய் குடிக்காம, மொறுமொறு வென வரும்" என்றாள் சொப்னா.

ராகிணி முறுக்கு அச்சில் மாவு போட்டு பிழிய முனைந்தாள். ம் ... ம் ....ம்..... ஒன்னும் முடியல. "கொஞ்சம் தண்ணீர் தெளிச்சுச் பெசஞ்சுக்கிறேனே" என்றாள் ராகிணி. முறுக்கச்சு ஒடஞ்சிடுமோன்னு பயம். "நீ அந்தப் பக்கம் புடி, நான் இந்தப் பக்கம் புடிக்கிறேன். ரெண்டு பேருமா சேர்ந்து பிழியலாம். எங்க வீட்டிலும் நானும் சுதாவுமா சேர்ந்து தான் எல்லா முறுக்குகளையும் பிழிஞ்சோம்" என்றாள் சொப்னா.

ராகிணிக்கு கண்களில் கண்ணீர் ஊற்று. பிழிந்தவர்களின் கஷ்டத்தை நினைத்து அல்ல. முறுக்கு அச்சை நினைத்துத் தான். உடைந்திருந்தால்?

நல்லவேளை தேன்குழல் அச்சை எடுத்து சென்றாள். இதுவே ஓமப்பொடி அச்சாக இருந்திருந்தால்?

இனி ஏதாவது சாக்கு போக்கு சொல்லி ஓமப் பொடி வில்லையை மட்டும் கொடுக்கக் கூடாது என தனக்குத் தானே தீர்மானம் போட்டுக் கொண்டாள். சில நாட்களுக்குப் பின் மீண்டும் சொப்னா வந்து கதவைத் தட்டியதும் ஏற்கனவே போட்ட தீர்மானத்தை மனத் திரையில் ஒருமுறை ஓட விட்டு உறுதி செய்து கொண்டு கதவை திறந்தாள் ராகவி.

"சுதாவுக்கு வேல போச்சு, இன்னிக்கு நைட்டுக்கே நான் இந்தியா கௌம்புறேன். இங்க கொஞ்சம் வேல இருக்கு. அதையெல்லாம் முடிச்சிட்டு சுதா அடுத்த வாரம் கௌம்பிடுவார். கொஞ்சம் திங்க்ஸ் வாங்க வேண்டி இருக்கு. வரட்டுமா பார்த்துக்கோ" ஒப்பித்து விட்டு ஓடினாள் சொப்னா.

அதற்கு மேல் அங்கு நின்றிருந்தால் இரண்டு பேருமே அழுது விடுவார்கள் போன்ற சூழல். "சொப்னா போகாதே, இந்தா முறுக்கச்சு. ஓமப் பொடி சுடு. இல்ல ஒடச்சுக் கூட போடு. ஏன்னு ஒரு வார்த்தை கேக்க மாட்டேன். ஆனா இங்கிருந்து மட்டும் போயிடாதே" என சொல்ல வேண்டும் போல் இருந்தது ராகிணிக்கு. ஆனால் அவளால் சொப்னா அந்த தெருவில் சென்று மறையும் வரை நின்று பார்த்துக் கொண்டு தான் இருக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பிறருடைய துன்பங்களை நினைத்துப் பார்ப்பதால் நம்முடைய துன்பங்களை சகிக்கக் கற்றுக்கொள்கின்றோம். *—மார்க் ட்வைன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தமிழர் நிர்வாகம் ஊனமடைந்துவிட்டதா?

நேற்றைய தினம் ஓர் அன்பர் நம்மைச் சந்தித்தார். மிகுந்த வேதனை அவரை ஆட்கொண்டிருந்தது. என்ன சங்கதி என வினவினோம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனியார் துறையில் சேவையாற்றுவதற்காக, அனுமதிக்கப்பட்ட ஐந்து ஆண்டு கால சம்பளமற்ற விடுமுறைக்காகத்தான் விண்ணப்பித்திருந்ததாகவும் எனினும் சில சாட்டுப்போக்குகளைக் கூறி தனது விண்ணப்பம் குறித்த வடக்கு மாகாண அமைச்சினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக ஏலவே வெளிவந்த அரச சுற்றுநிருபத்துக்கு அமைய, சேவைக்காலத்தில் சம்பளமற்ற விடுமுறைக் காலம் சேர்க்கப்படும் என்ற அந்தச் சலுகையைத் தாம் இழக்க நேரிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

விடுமுறைக்காக இனி புதிதாக விண்ணப்பிக்கும்போது புதிய சுற்றுநிருபத்தின் பிரகாரமேதான் விண்ணப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அந்த விண்ணப்பம் கூட ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பது தெரியவில்லை எனவும் அவர் ஏக்கத்துடன் குறிப்பிட்டார்.

இங்குதான் தமிழர் நிர்வாகம் ஊனப்பட்டுள்ளது. சில உயர் அதிகாரிகள் தங்கள் இஷ்டப்படி நடந்து கொள்கிறார்கள். தங்களுக்கு இருக்கக்கூடிய பதவி வழி அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

எனினும் இயற்கை அவர்களைத் தண்டித்தால் ஒழிய அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு யாருமே இல்லை.

அதிலும் குறிப்பாக, அரச நிர்வாகச் செயற்பாட்டை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய ஆளுநர் தரப்பும் பிரதம செயலாளர் பிரிவும் இதுபற்றி எதுவும் தெரியாத நிலைமையில் இருக்கின்றன.

உண்மையில் சிங்கள அதிகாரிகள் இரக்கமுடனும் மனச்சாட்சியுடனும் நடக்கின்றார்கள். அவர்களைச் சந்தித்து நிலைமையை எடுத்துக்கூறி காரியத்தைச் செய்ய முடியும்.

ஆனால் எங்கள் தமிழ் அதிகாரிகளைச் சந்திக்க முடிவதில்லை. அவ்வாறு சந்தித்தாலும் எரிந்து விழுகிறார்கள். பிரச்சினைக்கான தீர்வை அவர்கள் காண்பதே இல்லை.

மாறாக, சந்திக்க விரும்புகின்றவர்களை ஓட ஓடத் துரத்திவிட்டால், தங்களின் பிரச்சினை தீர்ந்து விட்டதாக அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆக, ஒரு சில தமிழ் அதிகாரிகள் மட்டுமே மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கின்றனர். இருந்தும் ஊனமடைந்துள்ள தமிழர் பிரதேசத்து நிர்வாகத்தில் உயர்ந்த சிந்தனையுடைய அதிகாரிகளாலும் எதுவும் செய்ய முடியாதுள்ளது. இதுவே யதார்த்தம்.

ஆம் அரச சுற்றுநிருபத்துக்கமைய விடுமுறைக்காக விண்ணப்பித்த பலரின் விண்ணப்பங்கள் ஏன் எதற்கு என்ற காரணம் இன்றி நிராகரிக்கப்படுகின்றன. இங்கு நிலைமை இதுவாக இருக்க, சிங்கள பகுதியில் பலர் மேற்குறித்த அரச சுற்றுநிருபத்துக்கு அமைய விடுமுறையைப் பெற்று வெளிநாடுகளுக்ளுக்குச் சென்று அங்கு வேலை செய்கின்றனர். உள்நாட்டிலும் மிக உயர்ந்த சம்பளக் கொடுப்பனவை வழங்கக்கூடிய நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பங்கள் ஊனமடைந்த எங்கள் தமிழ்ப் பிரதேசத்தின் அரச நிர்வாகம் காரணமாக, எம் மக்களுக்குக் கிடைக்காமல் போயுள்ளது. இதுவே உண்மை.

இங்குதான் வடக்கு மாகாண ஆளுநர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விடுமுறைக்கு விண்ணப்பித்தவர்களில் நிரகாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலிக்க வேண்டும். அப்போதுதான் எங்களிடம் இருக்கக்கூடிய மன ஊனம் எத்தன்மையதென்பது தெரியவரும்.

# எந்தவொரு தேர்தலுக்கும் நாங்கள் தயாராக உள்ளோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

எந்தவொரு தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் சமூக மற்றும் மனிதாபிமான அவலம் தோற்றுவிக்கப் பட்டுள்ளது. அரசாங்கமொன்று இல்லாதது போலான நிலையில் சுகாதாரத்துறையில் ஊழல், மோசடிகள் அதிகரித்துள்ளன அஸ்வெசும வரிசையிலும் மக்கள் உயிரிழக்கின்றனர் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாண்மைகள் வீழ்ச்சியடைந்துள்ளன.

மக்கள் கடன் சுமையில் சிக்கித் தவிக்கும் நேரத்தில், ஆட்சியே இல்லை என்ற அளவுக்கு திருட்டு,மோசடி,ஊழல் தலைதூக்கியுள்ளது.

பலவீனமான ஆட்சி நிர்வாகம் ஜனநாயக உரிமைகளை மீறி தேர்தலை ஒத்திவைப்பதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் மக்கள் இருக்கும் அவலநிலையில் இருந்து காப்பாற்ற முடியாவிட்டால் புதிய ஆணைக்கு செல்ல வேண்டும் என்றும், அப்புதிய மக்கள் ஆணைக்குள் புதிய தேசிய கொள்கையின் மூலம் நாட்டின் இலக்குகளை அடைய முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எந்த தேர்தலுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது மக்களின் கோரிக்கையான தேர்தல் உரிமை வழங்கப்பட வேண்டும் மக்கள் இறையாண்மை மற்றும் மக்கள் ஆணை எல்லாவற்றையும் விட முக்கியமானது அரசாங்கத்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியாவிட்டால் மக்கள் ஆணைக்கு செல்ல வேண்டும் மக்கள் ஆணை எனும் மக்களினது நீதிமன்றத்திற்குச் செல்ல ஐக்கிய மக்கள் சக்தி தயார் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## இந்தியா ஒருபோதும் அழுத்தம் கொடுக்கவில்லை

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

எல்லா நாடுகளுடனும் நெருங்கிய உறவைப் பேணிய நிலையில், தமக்கு இந்தியாவினால் எந்த வித அழுத்தமும் கொடுக்கப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போது இதனை கூறியுள்ளார்.

மேலும், தனிப்பட்ட முறையில் பிரதமர் மோடியோ அல்லது இந்திய அரசோ என்னை வற்புறுத்தவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா, ரஸ்யா, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி என அனைத்து நாடுகளுடனும் நான் நெருங்கிய உறவைப் பேணி வந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகளுடனான நல்லுறவு அரசியல் தலைவர்கள் கொண்டிருக்க வேண்டிய கலை என மைத்ரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## களுத்துறை கடற்கரையில் தாயும் சேயும் சடலங்களாக மீட்பு

களுத்துறை கடற்கரையில் தாயும் சேயும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை வடக்கு கடற்கரையில் கரையொதுங்கி இருந்த பெண் ஒருவரின் சடலம் நேற்று காலை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் சடலம் களுத்துறை கடற்கரைப் பகுதியில் சடலமாக கண்டெடுக்கப்பட்ட சிறுமியின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வடக்கு நாகசந்திக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் இருந்து இரண்டரை வயதான குழந்தையின் சடலமொன்று நேற்று முன்தினம் இரவு மீட்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸார் நடத்திய விசாரணையில், கடற்கரை பாறையில் சிக்கியிருந்த நிலையில் பெண்ணின் சடலம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த தாயும் மகளும் களுத்துறை - தொடம்கொட - ஹல்கண்டாவல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தற்போது தெரியவந்துள்ளதுடன் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## வசந்தமுதலிகே பிணையில் விடுதலை

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் இணைப்பாளர் வசந்த முதலிகே பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) கொழும்பு கோட்டை நீதிமன்றத்தில் முற்படுத்திய போதே இவ்வாறு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு முன்பாக இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது குழப்பம் ஏற்படுத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜேர்மனியை சேர்ந்த சுற்றுலா பயணி 100 ஆவது தடவையாக இலங்கைக்கு விஜயம்

ஜேர்மனியை சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் 100 ஆவது தடவையாக இலங்கைக்கு வந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

ஜோர்ஜ் சீலன் என்ற 72 வயது நபரான குறித்த சுற்றுலாப்பயணியை வரவேற்கும் நிகழ்வு ருஹுனு சுற்றுலா பணியகத்தில் இடம்பெற்றது.

சிங்கள மொழியை சரளமாகப் பேசக் கூடிய குறித்த நபர் 1971 ஆம் ஆண்டு 19 வயதில் முதன்முறையாக இலங்கைக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பிறகு ஜோர்ஜ் சீலன் ஆண்டுதோறும் பல தடவைகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், நூறாவது தடவையாக தான் இலங்கைக்கு விஜயம் செய்வதில் மகிழ்ச்சி அடைவதாக அவர் கூறியுள்ளார். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** கார்கில்ஸ்மானிப்பாய், கொமர்ஷல்வங்கி -மானிப்பாய், ஈஞ்சடிவைரவர்கோவிலடி- மானிப்பாய், மானிப்பாய் மருத்துவமனை,மானிப்பாய் சந்தை, மேதர், [illegible] ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வாகன காப்புறுதி அட்டை கண்டெடுப்பு

வட்டுக்கோட்டை தென் மேற்கைச் சேர்ந்த கே.நிந்துஜன் என்பவரின் வாகன காப்புறுதி அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரத்தினை காட்டி வலம்புரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

28



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இராஜேந்திரனின் மகள் அருண் மொழி நங்கையார் என்ற பிரானார் ஆவர். இம்மன்னனின் மற்றொரு மகள், புகழ்மிக்க அம்மங்காதேவி ஆவாள். இராஜேந்திரன் கி.பி. 1044 இல் காலமாயிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

### இராஜாதிராஜசோழன் (கி.பி.1018-1054)

இராஜாதிராஜசோழன் முதலாம் இராஜராஜசோழனின் பேரனும் இராஜேந்திர சோழனின் மகனும் ஆவான். இராஜேந்திர சோழனின் காலத்திலேயே மன்னனுடைய மூத்த மகனாக இல்லாவிடினும் இவனுடைய திறமையைப் பாராட்டி இவனுக்கு இளவரசுப் பட்டம் வழங் கப்பட்டது.

மேலும் தன் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே தனக்கென்று மெய்க் கீர்த்திகளையும் பட்டங்களையும் பெறும் தனிச் சிறப்பும் இராஜாதிராஜ சோழனுக்கு அளிக்கப்பட்டது. இரா ஜர்திராஜன் தன் தந்தையுடன் சேர்ந்து 25 ஆண்டுகள் ஆட்சி புரிந் தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் பதவிக் காலத்தில் சோழப் பேரரசின் தெற்கில் ஈழத்திலும் சேர பாண்டிய நாடுகளிலும் கிளர்ச்சிகள் நடைபெற்றன.

வடநாட்டு மன்னர்கள் தென் னாட்டைக் கைப்பற்றுவது பொது வான வழக்கமாக இருந்தது. ஆனால் சோழ இராச்சியத்தை உறுதியாக நிலை நாட்டிய இராஜராஜனும் அவனுடைய திறமை மிக்க மகன் இராஜேந்திரன் காலங்களில் இந்த வழக்கு தலைகீழாக மாறி சோழ ருடைய வெற்றிச் சின்னமான புலிக் கொடி வடக்கே வெகு தூரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இராஜேந் திரனுக்குப் பிறகு அவனுடைய மூன்று மக்களும் ஒருவரை அடு த்து ஒருவராக அரியணை ஏறினர். தங்கள் தந்தையிடமிருந்து பெற்ற பரந்த இராச்சியத்தை அதன் புகழ் மங்காத வண்ணம் இம்மூவரும் திறமையுடன் காத்தனர்.

### இரண்டாம் இராஜேந்திர சோழன் (கி.பி 1051-1063)

இரண்டாம் இராஜேந்திர சோழன் முதலாம் இராஜேந்திர சோழனின் இரண்டாவது மகனும் முதலாம் இராஜராஜ சோழனின் பேரனும் ஆவான். சோழ மன்னனாயிருந்த இவனது அண்ணன் சாளுக்கிய மன்னனான முதலாம் சோமேசுவ ரனுடனான போரொன்றில் கொல் லப்பட போரைத் தொடர்ந்து நடத்திச் சோழர்களின் தோல்வியைத் தவிர்த் தவன் இவன். கி.பி. 1054 இல் போர்க்களத்திலேயே சோழ நாட்டின் அரசனாக முடிசூட்டிக் கொண்ட இவன் 1063 ஆம் ஆண்டு வரை ஆட்சி நடத்தினான்.

இவன் காலத்திலும் மேற்குச் சாளுக்கியருடனான சோழரின் பகைமை நீடித்திருந்தது. அவர்க ளுடன் போரிட்டு வெற்றியும் பெற்றுள் ளான். கீழைச் சாளுக்கியருடனான உறவு நல்ல நிலையில் இருந்தது. தனது மகளான மதுராந்தகி என்ப வள் கீழை சாளுக்கிய இளவரசனான இராசேந்திரன் என்பவனை மணந் திருந்தாள். இவர்களுக்குப் பிறந்த வனே முதலாம் குலோத்துங்கன் என்ற பெயருடன் சோழ நாட்டு அரசனாகி, சாளுக்கிய சோழ மரபு வழியை உருவாக்கியவன். இரண் டாம் இராஜேந்திரனைத் தொடர்ந்து, அவனுடைய தம்பியான வீர ராஜேந்திரன் சோழ மன்னனானான்.

### வீரராஜேந்திரசோழன் (கி.பி 1063 - 1070)

இரண்டாம் இராஜேந்திரசோழ னைத் தொடர்ந்து சோழ நாட்டு ஆட்சி பீடம் ஏறியவன் வீரராஜேந்திர சோழன் (கி.பி. 1063 - 1070). இவன் இரண்டாம் இராஜேந்திரனின் தம்பி ஆவான். இரண்டாம் இராஜேந்திர னின் மகனும் முடிக்குரிய வாரிசு மான இராஜமகேந்திரன் தந்தைக்கு முன்னரே இறந்துவிட்டதால் வீர ராஜேந்திரன் அரசனாக்கப்பட்டான். இவனுடைய காலம் சோழ நாட்டின் வரலாற்றில் பிரச்சினைகள் மிகுந்த காலமாயிருந்தது. தெற்கு, வடக்கு இருபுறங்களிலுமிருந்தும் போர்க ளையும் போட்டிகளையும் சந்திக்க வேண்டியிருந்தது.

சோழரின் ஆட்சியின் கீழ் இருந்த இலங்கைத் தீவின் தென்பகுதியில் தன்னை உறுதிப்படுத்தி வந்த விஜய பாகு என்னும் சிங்கள அரசன், சோழர்களை இலங்கையில் இருந்து துரத்த எண்ணி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தான். வீரராஜேந்திரன் இவனை அடக்குவதற்காக இலங்கை யில் இருந்த சோழர்ப் படைகளை இலங்கையின் தென்பகுதியான ருகுணைப் பகுதிக்கு அனுப்பினான். விஜயபாகுவின் வேண்டுகோளுக்கு இணங்கி பர்மாவின் அரசன் அவ னுக்குத் துணையாகக் கப்பல்களை யும் படைகளையும் அனுப்பினான்.

இவற்றின் துணையுடன் இலங் கையின் சோழர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கிளர்ச்சிகளை உரு வாக்குவதில் விஜயபாகு வெற்றி பெற்றான். இலங்கையில் ஏற்கென வேயிருந்த சோழர் படைகளுக்குத் துணையாகச் சோழ நாட்டிலிருந்தும் படைகள் இலங்கைக்கு அனுப்பப் பட்டன. இதன் மூலம் வீரபாண்டியன் கிளர்ச்சிகளை அடக்கினான் எனி னும் ருகுணைப் பகுதியில் தனது பலத்தை விஜயபாகு மேலும் அதி கரித்துக் கொண்டான். விஜயபாகுவின் நடவடிக்கைகள் பின் வந்த ஆண்டு களிலும் தொடர்ந்தது.

வீரராஜேந்திரன் கி.பி. 1070 ஆம் ஆண்டில் காலமானான். இவன் தனது ஆண் மக்களைச் சோழ நாட்டின் பகுதிகளில் ஆளுநராக நியமித்திருந்தான். வீரராஜேந்திர னின் இறப்பைத் தொடர்ந்து இவர் களில் ஒருவன் அதிராஜேந்திரன் என்னும் பெயருடன் அரசனானான்.

### அதிராஜேந்திர சோழன் (கி.பி. 1063-1070)

அதிராஜேந்திர சோழன் வீரரா ஜேந்திர சோழனின் மகன் ஆவான். தந்தை இருந்த காலத்திலேயே இவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டப் பட்டது. கி.பி 1070 ஆம் ஆண்டில் வீரராஜேந்திரன் இறக்கவே, அதிரா ஜேந்திரன் சோழ நாட்டுக்கு அரசன் ஆனான். இவனுடைய ஆட்சி மிக வும் குறுகியது. பதவியேற்ற அதே ஆண்டிலேயே சில மாதங்களில் அவன் இறக்க நேரிட்டது.

**ராஜராஜசோழன் (985 - 1014) காலத்து தங்க மடைகள்**
**(தங்க கஹவனு நாணயங்கள்)**
**முன்பக்கம் - எழுந்து நிற்கும் அரசனும் சின்னங்களும்**
**பின்பக்கம்-உட்கார்ந்திருக்கும் அரசனும் சின்னங்களும்**



இவனது இறப்புப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. வைணவ நூலொன்று இவன் நோய் வாய்ப் பட்டு இறந்ததாகக் கூறினும் அதிரா ஜேந்திரன் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது. அக் காலத்தில் வைணவர்களுக்கும் சைவர்களுக்கும் இடையில் பிரச்சி னைகள் இருந்ததாகத் தெரிகிறது. வைணவர்கள் தொல்லைகளுக்கு ஆளானதாகவும் இதன் காரண மாகக் கலகங்க்ள் நிகழ்ந்ததாகவும் கருதப்படுகின்றது. அதிராஜேந்தி ரனின் இறப்புக்கும் இதற்கும் தொட ர்பு இருப்பதாகச் சில ஆய்வாளர்கள் ஐயம் வெளியிட்டுள்ளார்கள்.

வாரிசு எவரும் இன்றி அதிரா ஜேந்திரன் இறந்தது, சோழ அரச மரபில் முக்கியமான மாற்றத்துக்குக் காரணமானது. அதுவரை, விஜ யாலய சோழனின் நேரடி ஆண் வழியினரால் ஆளப்பட்டு வந்த சோழநாடு, முதலாம் இராஜேந் திரனின் மகள் வழியில், கிழக்குச் சாளுக்கிய அரச மரபில் வந்த இளவரசன் அநபாயச்சாளுக்கியன் கீழ் வந்தது. இவனே முதலாம் குலோத்துங்கன் எனப்பட்டவன்.

### ஆறாம் காசியப்பன் (1019)

ஐந்தாம் மகிந்தனின் மரணத் தைத் தொடர்ந்து ருகுணுவின் சிங்களப் படையினர் சோழர் படைக ளுக்கு எதிராகப் புரட்சி செய்ய ஆரம்பித்தனர். சோழர் ருகுணுவைத் தாக்கி ஐந்தாம் மகிந்தனைக் கைப்பற்றிய போது அவனது மக னும் இலங்கையின் இளவரசரு மான 6 ஆம் காசியப்பன் தப்பித்து ஓடி விட்டான். ஐந்தாம் மகிந்தனின் மறைவிற்குப் பின்னர் ருகுணுவில் இருந்து ஆரம்பித்த சிங்கள சோழ எதிர்ப்பிற்கு 12 வயது நிரம்பிய காசியப்பன் தலைமை வகித்தான்.

காசியப்பன் பற்றி அறிந்து கொண்ட இராஜேந்திரசோழன் தனது மகன் இராசாத்தி இராசன் தலைமையில் கி.பி.1041 இல் ஒரு படையை அனுப்பி காசியப்பனை எதிர்த்தான். இந்தப் போரில் காசியப்பன் உயிரிழந்ததுடன் சோழர் படை பெரும் வெற்றி ஈட்டியது. இவ்வாறு சோழர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இதேவேளை சூளவம்சத்தை ஆதாரமாகக் கொண்ட வரலாற்றுத் தகவல்கள் ஆறு மாதம் தொடர்ந்த இந்த யுத்தம் இரண்டு சிங்களத் தளபதிகள் தலைமையில் இடம் பெற்றதாகவும் இந்த யுத்தம் காரண மாக சோழர்கள் படை ருகுணுவில் இருந்து வெளியேறியதாகவும் கூறப் படுகின்றது. இதன் பின்னர் முதலாம் விக்கிரமபாகு எனும் பெயரில் காசியப்பன் தனது அரசை ருகுணு வில் அமைத்துக் கொண்டான் என வும் சூளவம்சம் கூறுகின்றது.

தொடர்ந்து தனது படைப் பலத்தைப் பெருக்கியதுடன் மக்களைத் தனக்கு ஆதரவாகத் திருப்பும் நோக்கிலும் விக்கிரமபாகு ஈடுபட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹர்த்தாலால்...

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட மனித புதைகுழி விவகாரமானது, தமிழ் அரசியல் பரப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்புடன், சர்வதேச கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தி, நேற்று வடக்குக் கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. ஹர்த்தாலை முன்னிட்டு, பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதோடு, தனியார் பேருந்துகளும் போக்குவரத்து சேவையில் ஈடுபடவில்லை.

ஹர்த்தாலுக்கு, வர்த்தகர் சங்கங்கள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் உள்ளிட்ட பல சங்கங்களும் சிவில் அமைப்புக்களும் ஆதரவினை தெரிவித்துள்ளன.

மேலும், யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் மனித புதைகுழி விவகாரத்திற்கு சர்வதேச மத்தியஸ்தத்துடன் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று வலியுறுத்தி, நேற்றைய ஹர்த்தாலுக்கு முழுமையாக ஆதரவினை வழங்கினர்.

ஹர்த்தால் காரணமாக, வடக்குக் கிழக்கில் பெரும்பாலான பகுதிகளில் ஆள் நடமாட்டமின்றி, வெறிச்சோடி காணப்பட்டதையும் அவதானிக்க முடிகிறது. (ம-7,33,60,104)

## முள்ளிவாய்க்...

ஸின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி பிராயன் உடக்வே, இறுதி யுத்தத்தில் உயிர்நீத்த மக்களுக்காக சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் புனித சின்னப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தரிசிப்பின் பின் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதனையடுத்து சுனாமி நினைவாலய தரிசிப்பிலும் புனித இராயப்பர் ஆலயத்தில் இடம்பெற்ற நற்கருணை ஆசீர்வாதத்திலும் ஈடுபட்டிருந்தார். (ம-7,315)

## வடக்குக் கிழக்...

விசேட கலந்துரையாடலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தனியார் வர்த்தக நிலையங்களில் விலைகள் குறைக்கப்படாத நிலையில் விற்பனை செய்துவரும் நிலையில் குறைந்த விலையில் மக்களுக்கு பொருட்களை விற்பனை செய்யவேண்டிய நிலை அரசாங்கத்திற்கு உள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 10 சதொச விற்பனை நிலையங்களை திறப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## முல்லை...

சர்வதேச கண்காணிப்பில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்க வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்திற்கு நீதி கோரி வடக்குக் கிழக்கு தழுவிய வகையில் ஹர்த்தால் அனுஷ்டிக்கபட்டது.

வடக்குக் கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்திய ஹர்த்தால் மற்றும் பேரணி ஆகியன நிறைவுக்கு வந்துள்ள நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினர் கூட்டு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில், சர்வதேசத்தின் கண்காணிப்பில் மனிதப் புதைகுழிகளை அகழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

காலாகாலமாக மனிதப் புதைகுழிகளே தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த பெரும் பரிசாக உள்ளது. செம்மணி முதல் கொக்குத்தொடுவாய் வரை இந்த விவகாரம் நீண்டுள்ளது. 1984ஆம் ஆண்டு முதல் கொக்குத்தொடுவாய் மற்றும் அதனை அண்டிய முல்லைத்தீவின் எல்லைக்கிராமங்களில் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். குறித்த காலப்பகுதியில் போர் உச்சமாக நடைபெற்று கொண்டிருந்தது. எனவே போர்க்காலப் பகுதியில் தான் இந்த புதைகுழிகள் தோன்றியிருக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (ம-7)

## மனித புதைகுழி...

டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கு நான் கொண்டு வந்தேன். அதனைத் தொடர்ந்து அவர் குறித்த அகழ்வு பணிகளுக்கு நிதி ஒதுக்குவதாக தெரிவித்தார். (ம-7)

## மனித...

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச நிபுணத்துவம் மற்றும், கண்காணிப்பை வலியுறுத்தியும் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை விவகாரம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நேற்று வெள்ளிக்கிழமை முல்லைத்தீவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி [illegible] இறுதிக் கட்ட போரின் போது தமிழ் மக்கள் இராணுவத்திடம் உறவுகளைக் கையளித்ததாகக் கூறப்படும் பகுதியான, முல்லைத்தீவு நீதிமன்றிற்கு அருகில் ஆரம்பமானது.

இவ்வாறு ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி தொடர்ந்து நீதிமன்றுக்கு முன்பாகச் சென்று மாங்குளம் முல்லைத்தீவு வீதியூடாக மாவட்ட செயலகத்தை வந்தடைந்து அங்கு மிகப்பாரிய அளவில் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இவ் ஆர்ப்பாட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தனியார் போக்குவரத்து சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கங்கள் பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 28.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 5189
M 1 6 7 6 5 2
விசேட சீட்டிழுப்பு: 19642, 0442924, 1078179, 0278527, 0117637, 0882116, 1068413, 2462610, 1432715, 0559841, 1527565
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 28/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1537
வெற்றி இலக்கங்கள்: B 05 17 20 45 49
Double Chance 51412

தன நிதானய
திகதி - 2023.07.28
சீட்டிழுப்பு இலக்கம் - 1219
O 13 15 27 82 O
Double Chance 21523

லக்கி 7
திகதி 28.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 015
L7 இலக்கம் 3 6
வெற்றி இலக்கினம்: விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள்: 5 7 0 5 0 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3431
சீட்டிழுப்பு திகதி 28.07.2023
I 19 37 40 54
I 63511
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.28
சீட்டிழுப்பு இலக்கம் 498
மிதுனம் 06 11 16 55 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2163 | வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.28 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 47 52 54 60 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,863,796.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 06 10 32 34 P
DLB

சனிதா
திகதி 2023.07.28 வெற்றி வாரம் 4324 வர்ணம் செம்மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 21 26 42 54 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,509,664.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 01 11 32 36 U
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 355
சீட்டிழுப்பு திகதி 2023.07.28
வெற்றி இலக்கங்கள் 04 | 19 | 37
பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,871,680/-

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 3875 | வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.07.28 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 28 30 46 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,192,036/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 09 37 52 54

கப்ருக
திகதி 28.07.2023 வெற்றி வாரம் 1339 வர்ணம் ஊதா
Y 37 16 17 33 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 421,943,954.20
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 03 14 58 60 F
தொலை பேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோட்டிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 1989
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.07.28
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,811,294/-
வெற்றி இலக்கங்கள் 17 71 75 76 Y
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள் 16 34 52 69 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-6976)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

## WORK IN CANADA
## WORK PERMITS

### COMPUTER TECHNICIANS

COMPUTER சம்மந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

✓ 2 YEAR WORK PERMITS
✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE 0777-068-777

(C-6976)


# மலையக மக்களின் 200 ஆவது ஆண்டு நிறைவு
# தலை மன்னாரிலிருந்து மாத்தளை வரையான நடை பயணம் ஆரம்பம்



தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைபயணமாக சென்று மலையக மக்கள் குடியேறிய 200 ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பமாகவுள்ள நடைபயணத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் தலைமன்னாரில் ஆரம்பமானது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் ஆகின்றது. அவர்கள் தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடை பயணமாகவே வந்து இந்த மலையகப் பகுதியில் குடியேறியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதை அடிப்படையாக வைத்து இன்று சனிக்கிழமை 29ம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 12ந் திகதி வரை தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரையிலான ஒரு நடைப் பயணத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

தலைமன்னார் கடற்கரை பகுதியில் அமைக்கப்பட்ட மலையக மக்கள் இலங்கையில் கால் பதித்து 200 ஆண் டுகள் நிறைவின் நினைவுத் தூபி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (ம-7.285)


## விற்பனைக்கு

பலசரக்கு கடையில்
பாவித்த ராக்கைகள்
கண்ணாடி அலுமாரிகள்
விற்பனைக்கு உண்டு.

(16541)

074 238 9466

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் காங்கேசன்
துறையில் 9 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
துறைமுக சந்தியில் இருந்து
1 km தூரத்தில்

(16555)

074 234 3241

## காணி விற்பனைக்கு

யாழ் மாநகரசபை பகுதிக்குள் ஆறுகால் மடம் தில்லைவயல் 2 ஆம் ஒழுங்கையில் 75 3/4 காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
அராலி வீதியூடாகவும் பாதை உண்டு.
பரப்பு ரூபாய் – 15 இலட்சம் முதல்

(16507)

077 352 5670
077 894 7293

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/=

(16349)

T.P:077 544 8503

## Online Classes

தமிழ் மொழி மூலம்/
English Medium

- A/L (Local) Cambridge
  - Biology
  - Chemistry
- HND tutorial
  - Genetics
  - Bio Chemistry
  - Micro biology

Conducted by Lecturer

(16549)

077 807 5566

## காணி விற்பனைக்கு

நவாலி சென்பீற்ரேஸ்
தேவாலயத்திற்கு வடக்கு
வீதியில் சுமார் 600m
தூரத்தில் நல்ல
சூழலில் 6.5 பரப்பு காணி
விற்பனைக்கு உண்டு.
விலை பேசித்
தீர்மானிக்கப்படும்.

(16551)

076 200 2044
நிரூபன்

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின்
கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg சீனி | - 235/= | (max 2Kg) |
| 1 Kg றவை | - 295/= | |
| 1 Kg கோதுமை மா | - 189/= | (max 5Kg) |
| 1 Kg அரிசி மா | - 170/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 149/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 282/= | (max 3Kg) |
| 1 Kg மல்லி No.1 | - 420/= | |
| 10 Kg விஜிதா நாடு அரிசி | - 1815/= | |
| 400 g Nestomalt box | - 799/= | |
| அங்கர் யோக்கட் | - 50/= | |

(16558)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள்.
குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை
கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

## வடஇந்தியா, காசி, சீரடி, திருப்பதி யாத்திரை

ஆரம்பம் : 15.09.2023 | நாட்கள் : 16 | யாத்திரிகர் : 15

**செல்லுமிடங்கள் சுருக்கமாக: டெல்லி:** நாராயணர் கோவில்மற்ற்றய இடங்கள் சுற்றிப்பார்த்தல், **ஆக்ரா**, தாஜ்மகால், மாதுர, கிருஸ்ணஜென்மபூமி பிரேம்மந்திர் தரிசித்தல், **அலகாபாத்**, கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணிசங்கமம் வேறு இடங்களும் காணலாம். கயா காலமாணவர்களுக்கும் சிரார்த்தம் செய்யும் இடம் அகால மரணமாணவர்களுக்கும் சேரத்து செய்யலாம். புத்தகயா, பல நாடுகள் கட்டிய புத்தாலயங்கள், **சீத்தாமடி**, சீதை தாயருடன் பூமிக்குள் புதையுண்ட இடம் **காசி** விஸ்வநாதர் உட்பட்ட 15 இடங்கள் காசியில் தரிசிக்கலாம் அத்துடன் **கங்காபூசையும்** காணலாம். 3 நாட்கள் காசியில் தங்கல் பின்பு **மும்பாய்**, சீரடிபாபா தரிசனம் சனிசிங்கினாப்பூர், சனிபகவான் கோவில், திரியம்பகேஸ்வரர் ஜோதி லிங்கதரிசனம் வேறு இடங்களும் காணலாம். பின்னர் **இராமேஸ்வரம்** தீர்த்தமாடி காசியாத்திரை நிறைவு பின்னர் நவபாஷணம், உத்திரகோசமங்கை சிவன் ஆலயம், திருப்புலானி தரிசித்து மதுரைமீனாட்சி சுந்தரேஸ்வரர் தரிசனம் முடித்து **திருப்பதி**, காளகஸ்திரி, அலமேலுமங்கா, திருத்தணி தரிசனம் முடித்து **சென்னை** வருகை 1 நாள் சென்னையில் சொப்பிங் முடித்து 01.10.2023 நாடுதிரும்பல்.

பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை : 5 விமானப்பயணச்சீட்டு, மூன்றுவேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த சுத்தமான சைவ உணவு, 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை இணைந்த அறைகள், காப்பி, ரீ, குடிநீர், (மினரல் வாட்டர்), யாத்திரிகை முழுவதும் AC வாகன வசதி வீட்டிலிருந்து விமான நிலையம் செல்லவும் திரும்ப வீட்டிற்கு வரவும் வாகன வசதி (யாழ் கொழும்பு யாழ்) வாகன வசதி செய்து தரப்படும். விபரங்களை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

குறைந்த கட்டணம்
நிறைவான தரிசனம்

"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"
" பூரண பாதுகாப்பான யாத்திரைப் பயணம்"

(16544)

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
Office:City Center Shopping Complex 3rd Floor, No.59,3/6, Sea Street, Colombo-11
Email: sriranganathan2601@gmail.com Facebook:sridevisriranganathan.thuraiappa
Tel: 077 768 0102, 077 736 2154


# மரண அறிவித்தல்

தோற்றம்
18
07
1944



மறைவு
28
07
2023

## கார்த்திகேசு யோகாம்பாள்

சுழிபுரம் திருவடி நிலையைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையையும் மூளாய் வீதியையும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகாம்பாள் அவர்கள் நேற்று (28.07.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரமுத்து - இத்தினிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னவர், பொன்னார் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பூமாதேவி மற்றும் கனகலிங்கம்(அம்பாள் ஸ்ரோர்ஸ் வட்டுக்கோட்டை), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சூரியகுமாரி(சுவிஸ்), செல்வம், ரஞ்சினி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வரதராசா, ரஞ்சிதா, வளர்மதி, புலேந்திரன்(சுவிஸ்), ஜெகதீஸ்வரன்(கமலா ஸ்ரோர்ஸ் வட்டுக்கோட்டை), புண்ணியமூர்த்தி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன்(பிரான்ஸ்), அமரர் நந்தூரன், சிந்துஜன், தனுசன், கலைவாணி, சியாமினி, கஜேந்திரன்(சுவிஸ்), கவீந்திரன்(சுவிஸ்), கஜநிதன் (சுவிஸ்), தர்சிகா, லக்சன், தனுஜா, கஜீபன், புவிலவன், பிரதீபன், ரூபிகா, கிருபாகரன், கஜீவன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ரேஷ்மிகாவின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 30.07.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
கமலா ஸ்ரோர்ஸ்
மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

077 230 3165
077 ... 

(C-6975)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org